உ

கடவுள்துணை

திருமூர்த்திதேவர்களுடைய செய்கையென்னும்

# கலியுகசமாதானம்.



இவை - சிறுமணவூர்

முனுசாமிமுதலியாராலியற்றியதை

ஆ-இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898

சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை

நாராயணமுதலிவீதி (52) வது நெம்பர் வீடு.

உ

கணபதி துணை

# கலியுகசமாதானம்.

இ-ம்-ரா. கராமகிரினை - ஆதிதாளம்.

பல்லவி.

கோடஞ்செய்யாதீர் — இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

அநுபல்லவி.

கோபமகற்றிவிய — வேதபுராணத்தின்
தாபத்தைகேளுங்கள் — ஞாபகமற்றீரோ (கோ)

சரணங்கள்.

தருமத்தை விடாதோரும் — தாங்கள் தீயோரென்றும்
சஞ்சமென்றுபித்ததனை — வஞ்சித்திடுவாரென்றும்
குருபத்தினியாரை — கூடநினைப்பாரென்றும்
கொடுத்துக்கடனைக்கேட்டால் — அடிக்கத்துணிவாரென்றும்
கதைகட்டினீரோ முந்தியுகத்தாரை
பதத்தில்வைத்தீரோ இன்னம்

அதிக்கோனைவஞ்சித்து — ஆஸ்திசேர்ப்பாரென்றும்
அளவுக்குமிஞ்சின — ஸ்த்ரீயைப்புணர்வாரென்றும்
மதித்தமூதக்குறி — நல்மனத்தோரென்றும்
கலியுகத்தார்களை — கெடுவாரென்றும்
வில்லங்கங்கட்டி கதைகள்புராணத்தை
விபரீதமாக்கி

முறைதவறாமல் — மோடிசெய்வாரென்றும்
மூவர்பின் போசிக்காமல் — தன்னைமதிப்பாரென்றும்
மனுமனுசாஸ்திர — விதிகடப்பாரென்றும்
மற்றவர்கள் கதைகளை — மெத்தப்படிப்பாரென்றும்
புகழ்விட்டீரோ கலியாச்சிறுவனை
காக்கவிட்டீரோ இன்னம்

ஜாதிவரம்பில்லாமல் — ஜனித்திடுவாரென்றும்
சகலமக்கத்திருக்கும் — ஒன்றாய்கலப்பாரென்றும்
நீதியிழுத்ததுணை — யாருக்கும்பாவமென்றும்
இவ்வண்ணம்போனபடி — நின்றதைச்சொன்னீர்
கருதிமோசமடைய உங்கள்புனைந்துரைகளி
சொன்னீரென்கேளும் ஆத்த

முந்தியுகத்தாரென்ன முறையோடே நடந்தது
முதியோரிளைஞரென்ற முறையெங்கேயிருந்தது
இந்தயுகத்தாரென்ன விடையூறுசெய்தது
யெல்லாஞ்சொன்னாலென்ன பொல்லாதவனென்று
கோபஞ்செய்யாதீர். இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

கலியுகம்கலியுகம் கலியுகமென்றிப்போ
காணுந்தொழிலுக்கெல்லாம் நாணிசிரித்துக்கொண்டு
வலியப்புளிசிலைவத்த வியாசன்கதைதலையக்கொண்டு
வருத்தத்திலிளைஞரை பொருத்தவைத்தீர்களே
மிகப்பெரியோரே முந்தியுகத்தைகொஞ்சம்
கவனித்துப்பாரோ அந்த

வசிஷ்டனார்வசியென்னும் தாசிவயற்றுப்பிள்ளை
வசிஷ்டன்சக்கிலிச்சிக்கி வதுவைசெய்மாப்பிள்ளை
பிரஷ்டசக்கிலிச்சிக்கி பிறந்தான்சத்திமுனி
புலச்சிக்கும்சத்திக்கும் பிள்ளைபராசரன்
விதமறிவீரோ மீன்வலைச்சிமகன்
வியாசனென்பீரோ காட்டுக்

கலையின்வயற்றில்கலை கோட்டார்பிறந்ததும்
காராவின்வயற்றிலே கௌதமர்உதித்ததும்
புலைச்சிவயற்றில்சாங்கர் பிள்ளையாய்ஜெனித்ததும்
புரளிநாரதர்வண்ணான் வீட்டில்பிறந்ததும்
நீரறிவீரோ பலபல
நூல்தெரிந்தோரே

கழுதைவயற்றில் காங்கேயர்பிறந்ததும்
காட்டுவேடச்சிக்கு வால்மீகர்ஜெனித்ததும்
பழுதற்றபிரவியாம் பயிரவன்கெற்பத்தில்
பகரும்ஜம்புகர் சௌனகர்பிறந்ததும்
பாரறியாதோ யாரில்லையென்றாலும்
சுருதிசொல்லாதோ

மாண்டவ்யர்தவக்களை மைந்தனைப்பிரந்ததும்
மதங்கர்சக்கிலிக்கு சுதனாகவந்ததும்
நீண்டசிலைஅஸ்வத் தாமன்பிரந்ததும்
நீரறியீர்களோ குதிரைவயற்றிலென்று
இதுகலியுகமாம் இவ்வாறுஜெனித்தமோ
இதுகலியுகந்தான் அந்த

சுகருக்குகிளிமூக்கு சுருதியும்சொல்லாதோ
சூரரனேகர்கள் மிருகம்போலில்லையோ
பகரும்பாஞ்சாலி வியாக்கிரமர் அறியீரோ
பாரதகோரங்கள் யாருக்குந்தெரியாதோ

கோபஞ்செய்யாதீர்—இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

விதியிருந்தொருமாது விபசாரஞ்செய்தாலும்
வினைப்பயனிருந்ததே கணவனைப்பிரிந்தாலும்
சதிசெய்தாள்கண்டீரோ சண்டாளக்கலியுகம்
கலியுகச்சேஷ்டைகள் காட்டுதப்பாவென்று
விதிமாற்றீரோ—யுகத்தையிழுத்துக்கொல்லு
மதிமாற்றீரோ முந்தி

அகலிகையிந்திரனை ஆசைக்கதுசரிதானோ
ஆரியர்பத்தினி காரையென்கிறமாது
வலிவிலேசந்திரனை யணைந்ததுமுறையாமோ
வரிவுள்ளபெரியோரே தெரியாமல்கேழ்க்குறேன்
கோபஞ்செய்யாதீர்—இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

பூர்க்குமுன்குந்தியும் பிள்ளையைப்பெற்றாளே
பத்தினிதுரோபதை கர்ணனைமதித்தாளே
வேர்க்கொண்டுசித்ராங்கி விபரீதம்வினைத்தாளே
விஜயனைப்பார்வதி மனதுக்குள்நினைத்தாளே
அதுநல்லயுகமோ—கலியுகமாத்திரம்
யேன்கெட்டயுகமோ ஐயா

மாமியாருடைத்தது மண்குடமுங்கொண்ட
மருமகளுடைத்தது பொன்குடமாமென்று
சாமிக்குமேகுரு சாமிகள்சொல்கிற
சங்கதிபோலநீர் எங்கள்மீதுவீணாய்
கோபஞ்செய்யாதீர்—இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

ஆடவருடனேநூ அமங்கலிபேசினால்
அவனைவைத்துக்கொண்டாள் சுதனைமறைத்துப்போட்டாள்
நாடுமறியுமிதை நானுந்தெரிவேனென்று
நம்பிக்கையோடுறை வம்புரைப்பெரியோரே
மறந்துபோனீரே—வியாசர்முண்டச்சியை
புணர்ந்ததும் பொய்யோ

விச்சித்ரவீரியன் வதுவைசெய்துகொண்ட
வனிதையம்பாலிகை யம்பிகையெனுமாதை
துஷ்டவியாசனவன இஷ்டப்படுத்திக்கொண்டு
துவாபரயுகத்திரு திருதராஷ்டிரன்பாண்டுவும்
அவன்பிள்ளையாமே—பாண்டவர்குலம்வியாசன்
பரம்பரையாமே

இந்தப்படிக்கிமுந்தி யுகத்திலனேகமாய்
இருக்ககலியுகம் யிதமாத்திரம்வீணாய்

தொக்கப்படித்திருஷ்ட தொழில்நடக்குமென்று
தூருசொல்லவந்த பேரில்பெரியோரே
கோபஞ்செய்யாதீர்—இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

பிருகுரிஷியென்பவன் மாதாவைக்கொன்றானே
பரசுராமன்றனைச் சிரச்சேதஞ்செய்தானே
பப்பிறவாதனன்பெற்ற தந்தையைவதைத்தானே
பிரமன்குமாரனை தானேஜெயித்தானே
யேன்பெரியோரே—கலியுகத்தில்மட்டும்
நடக்குமென்றீரே அந்த

திரேதாயுகத்துமன்னன் திருச்சங்குருவேனை
இராமாயெதிர்த்துப்போ ராடினனதுபொய்யோ
பேரிற்பெரியவிஷ்மாச் சாரிதன்குருவான
பரசுராமனைப்படுகளத்தி லடித்தானே
இதனுபக்தானோ—காங்கல்செய்தால்மட்டும்
யேன்குற்றமாமோ

சிரியமனிதர்செய்யும் சிறுபிழைபொட்டிக்கும்
ஜென்மங்கள்பலவாறுப் பன்னுவேதமறையெங்கும்
அரியரிஷிகள்தேவர் அறிந்துசெய்குற்றத்திற்
கவனென்னஜென்மங்கள் அடைந்தாரோசொல்லுங்கள்
கோபஞ்செய்யாதீர்—இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

## கும்மி.

மாலுமரனயன்றேவர்களும்-வெகு
மாகீமைதங்குந் தபோதனரும்
நாலுயுகத்திடசேதிசொல்ல சிறு
கன்னிகையேகேளும் வாங்களடி. ௧

தன்கர்த்தாவேபடைத்திட்டவூர்வசி
தன்னழகைக்கண்டு பிரம்மனவன்
உன்னிதமானக் கலைமானுருக்கொண்டு
வோடிப்புணர்ந்தானும் பெண்ணரசே. ௨

இப்பெருங்குற்றமதைப்பார்த்து பர
மேசுரன் பிரம்மா வினைத்தடுத்து
தப்பிதமென்றவனைந்து சிரசிலோர்
தலையையறுத்தாரும் பெண்ணரசே. ௩

பித்தித்திலோர்த்தனை தன்னைச்சிருட்டித்து
பேதைமதிநயன் தான்பார்த்து
பெண்கவிதழும் புணரவேணுமென்று
யேகித்தாத்திறன் கேளுங்கடி. ௪

முந்நித்திலோத்தமை போயிடவும் அவள்
பின்றிபிரமன் துரத்திடவும்
இந்திரன்கோட்டையில் போயிபுகுந்திட
யேமாந்துநின்றான் கேளுங்கடி. ௫

கன்னியுஞ்சென்று கதவடைக்கயிவன்
கண்ணுக்தெரியாமல் ஓடிடவே
தன்னுளமாரிக்கதவிடிக்கவும்
தறையிலே நாமம் விடுத்தாண்டி. ௬

கதவிடித்துக்கலிதமானவிந்தில்
கலசமுனியும் பிறந்தானென்று
மதக்கைநகிறந்தும் முனிகள்சொன்னமொழி
மண்டலங்காண வுரைத்தேனடி. ௭

முந்தியுகமே யிவ்வாறிருக்க அடி.
மொய்குழலேநமக் கெப்படியாம்
இந்தயுகமட்டும் துஷ்டநடக்கையென்
றெப்படிசொல்லுவார் கேளுங்கடி ௮

அத்திமாமுனி பத்தினியாமந்த
அனுசூயையென்கிற உத்தமியை
பத்திப்புணர்ந்திட வேணுமென்றுபா
மேகரன்விட்டுணு பிரமனுமாய் ௯

மூவருமபிராமணவேடமிட்டு வெகு
மோசமாமுனியில்விடுத்து
ஆவலாய்ப்பிச்சை போடுமம்மாவென்று
அந்தணர்போலவே நின்றனராம். ௰

அந்தணர்பிச்சைக்கி வந்தனரோவென்று
அனுசூயையம்மை யமுதெடுத்து
இந்தாருமையா வெனவணங்க யிவர்
யெனவென்றுரைத்தாராம் பாருங்கடி. ௰௧

கச்சைசகலையுங் களைந்துநிர்வாணமாய்
கண்ணுக்குமுன்னாலே வந்துநின்றால்
இச்சையாமபிச்சை யதுவேபோதுமென்
றின்பவழியெங் காட்டினராம். ௰௨

இம்மொழிகாதினில் கேட்டுசிஷிமாது
யாரடாபோக்கிரி பையலென்று
பொம்மைகள்போலவே மூவரையுஞ்சிறு
பிள்ளைகளாகச் செயித்துவிட்டார். ௰௩

சேயுருவாக்கிக் கிடத்திடவும் அப்போ
திருஷ்டிசங்காரம் தடைபடவும்

ஆப்த்தாரத மாமுனிவன்கண்டு
அனுகூலையம்மனைத் தானழைத்து ௧௪
மெத்தவுத்திவிரம் ஓடிவந்தரிஷி
பத்தினிகளை மிகப்பட்டணிந்து
புத்தியில்லாதோர் பிழைபொறுஞ்சநல்ல
உத்தமரன்றியார் சொல்லுமம்மா. ௧௫

மூவரின் சாபம் விலக்கவேண்டி முனி
முடிவால்கன்னிப் பசுப்பணிந்து
வெவ்வடிலையைத் திருப்பினதாலன்றோ
ஓடினார்மூவ ருலகமடி ௧௬

மூவரின்புத்தி யிவ்வாறிருக்க அந்த
மூடர்களுக்கு யெவ்வாறிருக்கும்
வெவ்விசமிக்க கலியுகங்கெட்டதேதல்
றேதுக்குணக்கிறார் கேளுங்கடி.

பிருகுரிஷிபெண்ஜாதி நாகவல்லியம்மை
பின்னுமனைகாயிருப்பாளென்று
திருமூர்த்திமூவரும் சென்றுகற்பழிக்க
சேஷ்டைகள்செய்தாராம் பாருங்கடி ௧௮

மெல்லியனது மிகக்கொதித்து யிவர்
மெத்தவுங் கூட்டப்பயல்களென்று
பிள்ளைகளாக வுருப்படுத்தியிவரை
புரட்டிமூலையில் தள்ளிவிட்டாள். ௧௯

அதியதேவர்க் கமுதளிக்கமாயன்
அற்புதமோகினி ரூபமெடுக்க
ஆதிசிவனும்பின்விரகங்கொண்டங்கனே
ஆயனைக்கூடிக் கலந்தாண்டி. ௨௰

அரியுமயனு மனுபவித்துடன்
அரிஹரனென்கிற பேர்வகித்து
பிரியமாவொரு பிள்ளையும்பெற்றாரே
பின்னையும்சாட்சிகள் வேணுமடி. ௨௧

தவத்திலமிருந்த வெண்ணாயிரம்பேரந்த
தாருகாவனத்துப் பெண்டுகளை
சிவனுமகரியுமாய் செய்தவிவகாரம்
சிலமயரியாதோ பெண்ணரசே. ௨௨

இச்சகைதேவர் நடந்திருக்க இன்னம்
மெத்தனவேங்கர் தெறியாள
சித்தலகலாழ்க்கை மானிடர்மீதில்
சொல்லுவதேன்குற்றம் கேளுங்கடி. ௨௩

தான்பெற்றபிள்ளையாம் நூறுபேர்க்குமதி
தான்சொல்லிபுத்தி திருத்தாமல்
பேயினைசண்டாளராய் போங்களென்றுசாபம்
இட்டான் வசிஷ்டனுங் கேளுங்கடி. உச

பிள்ளையைத்தந்தை ஜெபிக்கலையா பெற்ற
தந்தையைபிள்ளை வெதக்கலையா
மைந்தனைதந்தை வதைக்கலையா தேவர்
மர்மந்தெரியாதோ சொல்லுங்கடி உரு

குருவிலொருகுரு துரோணாச்சாரியை
குந்திமக்கள் பஞ்சபாண்டவர்கள்
தருமநெறியோரோ குருவைக்கொலைசெய்ய
தையலேலபாரதம் பாருங்கடி. உசா

மாலின்பெண்டாட்டியோ மார்பினிலேமறை
வேதன்பெண்டாட்டியோ நாவுக்குள்ளே
ஆலத்தையுண்ட சிவனுடபெண்டாட்டி
ஐயோசிரசில்குடிபுகுந்தாள். உஎ

இப்படிதேவர் சுமந்திருக்க யிந்த
பேழைமனிதற்கே காமமென்று
எப்படிவேதபுராணங்கள்சொல்லுது
யேனென்றுகேளடி பெண்ணரசே உஅ

சட்டுக்களையுமுறைக்கவில்லை கலி
காலகுணத்தையுங் காட்டவில்லை
பெட்டகம்போல முன்னோர்கள்வைத்தகதை
பூமியறிய வுரைத்தேண்டி உகூ

ஜீவிக்கதந்திரம் செய்தாக்கர்த்தன்றி
சேவனையேனும் செய்யவில்லை
பாவிப்பயலென்று என்னை தூஷிக்காதீர்
பாவலர்க்கெல்லாம் சரணமையா கூ௰

கருணைதுணைத்தஞ்சை பெரியசாமிப்பிள்ளை
கனிந்துசொன்ன மொழிப்படியே
திருமணலூர்முனி சாமிசொன்னக்கவி
நேசப்புலவோர் பிழைபொறுப்பீர். கூக

சித்தூர்ஜில்லா பாட்டுயென்னும்
கலியுகசமாதானம்
சொன்னவனாயில்
சம்பூர்ணம்.

---